# COPY OF DEPOSITION

(Chapter XXXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

S T C No.**152/2018** **பெயர்-துரைசாமி**

05.07.2019

**குறுக்கு விசாரணை**

என்னுடைய சொந்தஊர் தாசம்புதுர் ஆகும். எதிரியின் ஊர், விலாசம் முழுமையாக தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புகார் மற்றும் வழக்குரைஞர் அறிவிப்பு என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எதிரி எனக்கு பணம் கொடுக்காததால் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். புகார் மற்றும் வழக்குரைஞர் அறிவிப்பில் நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் விவசாயம் செய்து வருவதாக கூறியுள்ளேன். நான் தற்போது தான் விவாசயம் செய்வதாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு எத்தனை ஏக்கர் பூமி உள்ளது என்றால் 6 ஏக்கர் உள்ளது. அதில் 2 ஏக்கர் வாழை, 2 ஏக்கர்மஞ்சள், 2 ஏக்கர் கரும்பு விவசாயம் செய்து வருகிறேன். நான் பயிரிடக்கூடிய பயிர்களில் பூமிக்குரிய வருவாய்துறை ஆவணங்களில் அடங்கல் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னால் தற்போது அடங்கலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் என்னுடைய பூமியில மேற்சொன்ன பயிர்கள் பயிரிடவில்லை என்றும் அதனால் தான் அடங்கலை தாக்கல் செய்யஇயலாது என கூறியுள்ளேன் என்றால்சரியல்ல. எதிரிக்கும் எனக்கும் எவ்வாறு அறிமுகம் ஏற்பட்டது என்றால் என்னுடைய மாமன் மகன் இளங்கே மூலமாக அறிமுகம். இளங்கோ வித்யா மந்திர் பொறியியல் கல்லுரியில் டிரஸ்ட் மெம்பராக உள்ளார் என்றால் சரிதான். எதிரி அந்த கல்லுரியில் சேர்மேனாக உள்ளால் என்றால் எனக்கு தெரியாது. இளங்கோ சொல்லி தான் பணம்கொடுத்தேன் என்றால்சரியல்ல. எதிரி கேட்டுதான் நான் கொடுத்தேன். என்னுடைய புகாரிலும் அறிவிப்பிலும் எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்று கூறவில்லை என்றால் அவர் விவசாயம் செய்து வருகிறார் என்று கூறியுள்ளேன். எதிரியை பற்றி என்ன தொழில் செய்து என்று எனக்கு தெரியாததால் தான் நான் புகாரிலும் வழக்குரைஞர் அறிவிப்பிலும் அதை பற்றி கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரியை அறிமுகபடுத்திய இளங்கோவை எங்கள் தரப்பு சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் எத்தனை முறை கடன் வாங்கியுள்ளார் என்றால் இந்த வழக்கை தவிர வேறு எந்த பணமும் பெறவில்லை. என்ன அவசர தேவைக்காக பணம் வேண்டும் என்று எதிரி கேட்டார் என்றால் தன்னுடைய தனிப்பட்ட தேவைக்காக என்று கேட்டார். எப்போது என்னிடம் கடன் கேட்டார் என்றால் 01.10.2017 ம் தேதிக்கு சுமார் ஒருமாதம்

# COPY OF DEPOSITION

முன்னர் கடன் கேட்டார். எங்கு வைத்து பணம் கேட்டார் என்றால் இளங்கே வீட்டில் வைத்து கேட்டார். அப்போது நான் உடனே கொடுத்துவிட்டேனா என்றால் இல்லை. மஞ்சள் போட்டு எடுத்து பணம் கொடுக்கிறேன் என்று கூறினேன். மஞ்சள் 01.10.2017 தேதிக்கு சுமார் 1 மாதம் முன் போட்டேன். எப்பொழுது எடுத்தேன் என்றால் 01.10.2017 தேதிக்கு ஒரு வாரம் முன்பு எடுத்தேன். மேற்படி மஞ்சளை எங்கு விற்றேன் என்றால் ஒழுங்குமுறை விற்பனை கூடம், பெருந்துறையில் விற்று பணமாக்கினேன். அங்கு விற்பனை செய்ததற்கான ரசீது என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் 2 வருடம் ஆகிய காரணத்தினால் தேடிபார்த்து தாக்கல் செய்கிறேன். மேற்சொன்ன சொசைட்டியிலிருந்து நான் விற்பனை செய்ததற்கான ஆவணத்தை பெறமுடியுமா என்றால் ஆதாரம் கொடுத்தால் தான் தேடிபார்த்து கொடுப்பார்கள். நான்மேற்சொன்ன விற்பனை கூடத்தில் மஞ்சள் விற்று பணம் பார்த்தேன் என்று வழகிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால்சரியல்ல. நான் பேங்க் ஆப் இந்தியாவில் கணக்கு வைத்துள்ளேன். 01.10.2017 தேதியில் என்னுடைய வங்கி கணக்கு சேமிப்பில் எவ்வளவு பணம் இருந்தது என்றால் நான் அவ்வபோது பணம் எடுப்பதும் போடுவதும் வழக்கம். அதனால் சரியாக தெரியவில்லை. என்னுடைய பெயர் மற்றும் விலாசம் குறித்து நான் மஞ்சள் விற்று விற்பனை கூடத்திற்கு அழைப்பாணை அனுப்பி மஞ்சள் விற்பனை ஏற்பட்டதா என்பதை அறிந்துகொள்ள உமக்கு ஏதேனும் ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. நான் எவ்வளவு மஞ்சள் விற்றேன் என்றால் 50 சட்டை மஞ்சுள் சுமார் 4 லட்சம் ரூபாய்க்கு விற்றேன். நான் மேற்சொன்ன விவரத்தை வழக்கிற்காக பொய்யா சொல்கிறேன் என்றால்சரியல்ல. பொதுவாக கடன் பெற்றால் அதற்கு ஈடாக என்ன ஆவணம் பெறவேண்டும் என்றால் அது பற்றி எனக்கு சரியாக தெரியாது. மாதங்களாக இருந்தால் காசோலை எழுதி கொடுப்பதும், வருடக்கணக்காக என்றால் பாண்டு எழுதி கொடுப்பதும் வழக்கம் 01.10.2017 தேதியில் என் வங்கி கணக்கில் ரூ.7 லட்சம் இருந்ததற்கான ஆதாரம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. அதனை தாக்கல் செய்யமுடியாம என்றால் இல்லை. 01.10.2017 தேதியில் எதிரி என்னிடம் கடன் பெற்றதை உறுதிபடுத்துவதற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் காசோலை மட்டும் தான் கொடுத்தார். மேற்படி காசோலை நான் தான் கடன் பெற்றுள்ளேன் என்று எழுதிகொடுத்துள்ளாரா என்றால் இல்லை. 2 மாதத்திற்குள் கடனை திருப்பி தருவதா கூறி காசோலையை என்னிடம் கொடுத்தார். மேற்சொன்ன விவரத்தை வழக்கிற்காக பொய்சாட்சியம்அளிக்கிறேன்என்றால் சரியல்ல. நான் எவ்வளவு வட்டிக்கு பணம் கொடுத்தேன் என்றால் ரூ.1 க்கு 2 மாத்திற்கு ரூ.14000 வட்டி கொடுத்தார். மேற்படி வட்டி தொகை பெற்றதற்கான அதன் கணக்கு விவரத்தையும் என்னுடைய அறிவிப்பு மற்றும்

# COPY OF DEPOSITION

புகாரிலும் குறிபிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லும் எந்த நோட்டுக்கள் என்றால் 2000,500 ரூநோட்டுக்கள். மேற்படி தொகையை வங்கியிலிருந்து எடுத்தேனா என்றால் இல்லை. மஞ்சள் விற்ற தொகையிலிருந்து கொடுத்தேன். எனக்கு 6 ஏக்கர் விவசாய பூமி உள்ளதா என்பதற்கு ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கேட்டுக்கொண்டதற்கிணங்க 20.12.2017 ம் தேதி வங்கியில் தாக்கல் செய்துள்ளேன் என்று கூறியுளளேன். எப்பொழுது எதிரி 01.12.2017 தேதியில் காசோலையை வசூலுக்கு போடுமாறு கூறியிருந்தார். நான் வசூலுடக்கு போட 2 நாட்கள் முன்னார் என்னை அழைத்து 10 நாட்கள் கழித்து வசூலுக்கு போடுமாறு சொன்னார். எங்கு வைத்து சொன்னார் என்றால் இளங்கோ வீட்டில்வைத்து சொன்னார். நான் கடன் கொடுத்தாக சொல்லும சமயத்தில் யார் இருந்தார்கள் என்றால் நான், இளங்கோ, என் மனைவி மற்றும் எதிரி இருந்தார். அப்போது நேரம எவ்வளவு இருக்கும் என்றால் காலை 10 மணி இருக்கும். அங்கு என்ன நடந்தது என்றால் நான் பணத்தை கொடுத்து காசோலையை பெற்று கொண்டேன். காசோலையை எங்கு வைத்து பூர்த்தி செய்தார்கள் என்றால் நான் பணம் உள்ளே சென்று எடுத்துவரும்போதுவெளியில் காசோலையை பூர்த்தி செய்து கொண்டிருந்தார். எனது முன்னிலையில் கையெழுத்திட்டார். யார் எழுதிகொண்டிருந்தார் என்றால் எதிரி தான் எழுதி அவரே கையெழுத்திட்டார். என்னிடம் காட்டப்படும் காசோலை தான் எதிரி எழுதி கொடுத்த காசோலை என்றால்சரியல்ல. காசோலை நிரப்பப்பட்டிருக்கும் மையின் நிறம் நீலமாகவும் கையெழுத்து பச்சை நிறமாக உள்ளது என்றால்சரிதான். நான் சொல்வதுபோல் என் வீட்டில் வைத்து காசோலை எழுதபடவில்லை என்றால் சரியல்ல. நான் பணம் எடுத்துவிட்டு வரும் சமயம் எழுதி முடித்துவிட்டார்கள். எனது முன்னிலையில் கையெழுத்திட்டார். எதிரியிடம் கடன் கொடுப்பதற்கான என்ன ஆவண்ம வேண்டும் என்று கேட்டேன் என்றால் இல்லை. நான் கடன் கொடுத்த தேதியிலிருந்து வசூலுக்கு தாக்கல் செய்யும்வரை எதிரியுடன் தொடர்பில் இருந்தேனா என்றால் நான்அலைபேசியில் அழைத்தேன். அவர் எடுக்கவில்லை. அவருடைய அலைபேசி எண் என்னவென்று தெரியுமா என்றால் போனை பார்த்தால் தெரியும். நான் வட்டிக்கு கடன் கொடுப்பேனா என்றால் கைமாற்று கொடுப்பேன் ஆனால் வட்டிக்கு கொடுப்பதில்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. எதிரி மீது இதுபோன்று 4 வழக்குகள் விவரம் தெரியுமாஎன்றால் இல்லை. வீட்டுவசதி வாரியத்தில் வேலை செய்யும் சாந்தகுமார் எனக்கு தெரிந்வர் என்றால் இல்லை. அவர் இன்று என்னுடன் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ஏற்கனவே மேற்சொன்ன சாந்தகுமார் அவருடைய மாமனாரும் அவருடைய தாயாரும் எதிரி நடத்தி

# COPY OF DEPOSITION

வரும் கல்லுரியில் முதலீடு செய்து இழந்துவிட்டதால் அவரிடமிருந்து பழைய காசோலையை எடுத்து அவர்களுக்குவேண்டிய நபர்கள் மற்றும் என் மூலம் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி கொடுத்ததா சொல்லபடும் காசோலையை வசூலுக்கு செலுத்தியபோதுபோதிய பணம் இல்லை என்று திரும்ப வந்தததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய வங்கி கணக்கின் நகலை சேமிப்பு புத்தகத்தை தாக்கல் செய்யமுடியும் என்றால் சரிதான். அடங்கல் ரசீதுகளை தாக்கல் செய்யமுடியுமா என்றால் அவ்வளவு எளிதாக பெறஇயலாது. எனக்கு எந்தவித வசதியும் இல்லை என்றும், அதனால் தான் நான் என்னுடைய வங்கி சேமிப்பு புத்தகத்தைநீதிமன்றத்தில் தாக்கல் செய்ய மாட்டேன் என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் கல்லுரி இயங்கி கொண்டு இருக்கிறதா என்ற விவரம் அது பற்றி தெரியாது. எதிரி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என்றால் இல்லை. அதனால தான் மேற்சொன்ன விவரங்களை அறிவிப்பிலும் புகாரிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக வழக்கு காசோலை மோசடியாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.